# தாமோதர மாதத்தின் சிறப்பும், தீபஆரத்தியின் பலனும்

இறைபக்திக்குரிய நான்கு மாதங்கள் என்றழைக்கப்படும் சாதுர் மாதங்களில் கடைசியானதும், சிறந்த மகிமைகள் பொருந்திய மாதம் தாமோதர மாதம் ஆகும். சாதுர் மாதங்களில் இதனை கார்த்திகை என்றழைப்பர். தமிழ் மாதங்களில் கார்த்திகையை போல் இந்த தாமோதர மாதத்தில் பகவானின் ஆலயத்தையும், பூஜை அறையையும் நெய் தீபங்களால் அலங்கரிப்பது அவசியமானதாகும்.

## தாமோதர மாதம் என்பதன் பொருள்?

தாமோதரர் என்றால் ஸ்ரீகிருஷ்ணரை குறிக்கும். தாம என்றால் கயிறு. உதர என்றால் வயிறு. குறிப்பாக பகவான் ஸ்ரீகிருஷ்ணரை, அன்னை யசோதா தேவி கயிற்றால் உரலில் கட்டிய நிகழ்ச்சியை நினைவுபடுத்தும் பொருட்டும், கிருஷ்ணரின் தூய பக்தையுமான ஸ்ரீமதி ராதாராணியை வழிபடும் பொருட்டும் தாமோதரத் திருவிழா கொண்டாடப் படுகிறது.

பத்ம புராணம் "இம்மாதம் ஸ்ரீகிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானதாகும். இம்மாதத்தில் ஸ்ரீகிருஷ்ணருக்கு சிறிதளவு பக்திசேவை செய்தால் கூட கிருஷ்ணர் தன் திவ்ய ஸ்தலத்தையே அப்பக்தனுக்கு வழங்குவார்" என்று கூறுகிறது. அதே போல், "புண்ணிய மாதங்கள் அனைத்திலும் அதி புண்ணிய மாதம் தாமோதர மாதம்" என்று ஸ்கந்த புராணமும் இம்மாதத்தின் மகிமைகளை பலவாறு விவரிக்கிறது.

## விழாக்கள் நிரம்பிய மாதம்

'தீபாவளி', 'தாமோதர லீலை', 'ஸ்ரீமதி லெக்ஷ்மி பூஜை', 'பகுலாஷ்டமி' - ஸ்ரீராதா குண்டம் உருவான நாள், 'துளசி - சாளக்கிராம திருக்கல்யாணம்', 'கோவர்த்தன கிரி பூஜை' - மற்றும் பல முக்கியமான விழாக்கள் இந்த மாதத்தில் தான் நடைபெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தாமோதர விரதம் கடைபிடிக்கும் முறை

(1) ஹரே கிருஷ்ண மஹாமந்திர ஜபமும் (2) கிருஷ்ணருக்கு நெய் தீபம் காட்டுவதும், (3) உணவுக்கட்டுப்பாடும் தாமோதர மாத விரதத்தின் முக்கிய மூன்று சிறப்பம்சங்களாகும்.

## மஹாமந்திர ஜபம்

"ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே; ஹரே ராம ஹரே ராம; ராம ராம ஹரே ஹரே" எனும் பதினாறு வார்த்தைகளடங்கிய இந்த மஹாமந்திரத்தை குறைந்த பட்சம் 108 தடவையும், அதிகபட்சம் எவ்வளவு முறை உச்சரிக்க முடியுமோ அவ்வளவு முறை உச்சரிக்கலாம். ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மஹாபிரபுவின் மிக நெருங்கிய சீடரான ஸ்ரீலஜீவ கோஸ்வாமி அவர்கள் விரதங்கள் பின்பற்றுவதில் மிக முக்கியமானது ஹரி நாமத்தை உச்சரிப்பதே ஆகும் என்று வலியுறுத்தியுள்ளார். ஏனெனில் ஹரே கிருஷ்ண மஹாமந்திரம், விரதத்தை கடைபிடிப்பதற்கான மனநிலை உட்பட அனைத்து நலன்களையும் தரும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தீப ஆரத்தி வழிபாடு

பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கு பிரியமான தாமோதர மாதத்தில்



<u>**தீப ஆரத்தி காட்டுவதால் பலவிதமான நற்பலன்களை பெறலாம்**</u> என்று வேத சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதோ அவற்றில் சில. .

***ஸ்ரீ***கிருஷ்ணரின் ஆலயத்தில் பகவானுக்கு தீப ஆரத்தி காட்டினால் நிலைத்த செல்வத்தையும், நல்ல குழந்தைகளையும், புகழையும், வெற்றியையும் பெற முடியும்.

***ப***கவான் ஸ்ரீகிருஷ்ணருக்கு தினசரி நெய் விளக்கு காட்டுவதால் பல லட்சக்கணக்கான கல்பங்களில் செய்யப்பட்ட பாவங்கள் முழுவதும் அழிகின்றன.

***இ***ரண்டு மரத்துண்டுகளை ஒன்றுடன்ஒன்று தேய்த்தால் 'நெருப்பு' உண்டாவது எப்படி நிச்சயமோ, அதே போல் தாமோதர மாதத்தில் பகவானுக்கு நெய் தீப ஆரத்தி காட்டுவதால் நிச்சயம் அதன் நற்பலனை சந்தேகத்திற்கு இடமின்றி பெறலாம்.

***எ***ல்லா புண்ணிய நதிகளில் நீராடிய பலனையும், யாகங்கள் செய்த பலனையும் பெறுவதுடன், முன்னோர்களையும் நற்கதியடைய செய்யலாம்.

- பத்ம புராணம், ஸ்கந்த புராணம்

## உணவு முறை

அசைவ வகைகள் பொதுவாகவே தவிர்க்க வேண்டும். இது தவிர இம்மாதம் முழுவதும் உளுந்து மற்றும் உளுந்தால் செய்யப்பட்ட உணவு பதார்த்தங்கள் தவிர்க்கப்பட வேண்டும். ஏகாதசி நாட்களில் வழக்கம் போல் தானிய உணவு சேர்க்க கூடாது.

## மக்கள் நலன் கருதி நிகழ்ச்சி ஏற்பாடு

மதுரை மக்கள் நலன் கருதி தாமோதர மாதம் முழுவதும் இந்த தாமோதர தீபத் திருவிழா, இஸ்கான் - ஹரே கிருஷ்ணா கோயிலில் அனைவரும் பங்கேற்கும் வகையில் தினசரி மாலை 6.30 மணிக்கு தீபம் காட்டும் நிகழ்ச்சியும், சிறப்பு பூஜைகளும், வழிபாடுகளும் நடைபெறுகிறது.

இதில் பங்கேற்கும் அனைவரும் தங்கள் கரங்களால் நேரடியாக பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கு தீப ஆரத்தி காட்டி மன அமைதியும் மகிழ்ச்சியும் பெறலாம்.

மேலும் விழாவை முன்னிட்டு கோயில் சன்னதி முழுவதும் நெய் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.